முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1319

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.05.2023, புதன்கிழமை

1. பிரம்ம சூட்சும வரம் பெற்ற
   பிரணவ சக்திமிகு குருராஜனே
   வரம்பல ஆறுமுகன் என் சக்தியாக
   வையகத்தில் பெற்று வாழுகின்ற ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 27 ம் நாள், 10.05.2023, புதன்கிழமை)
   ஆசி தந்து அரங்கன் கரம்பட
   அகிலத்தில் தீட்சை பெறும் மக்களுக்கு
3. மக்களுக்கு யானே அரங்கன் கரம்பட
   மகத்துவமாக இறங்கி அருள்புரிகின்றேன்
   தேக்கமின்றி அரங்கன் கொள்கையை
   தேசமெங்கும் கொண்டு செல்லும் மக்களுக்கு
4. ஆக்கம் தந்து ஆறுமுகன் யான்
   அவர்களையும் ஞானியாக்கி மகிழ்விப்பேன்
   மகிழ்வுற இந்த அற்புதத்தை
   மரணமில்லா பெருவாழ்வு தன்னையும்
5. அகிலத்தில் அரங்கன் அவதாரத்தைக் கொண்டே
   ஆற்றல்பட ஆறுமுகன் யான் நடத்த
   அன்பர்களே ஆன்மீக ஞானபலம் வேண்டி அலைபவர்களே
   ஐயம்கொள்ளா அரங்கன்மேல் திட சரணாகதி கொண்டு
6. கொண்டுமே பிரணவக்குடில் தொடர்பை
   தொடர்ந்து ஏற்றுஇனிதே அரங்கன்வழி எக்கணமும் எந்தன்பால் பூஜைமுறை
   தக்கவைத்து தொடர்ந்து செய்துகொண்டு
   தர்மத்தின் வழி வந்தால் போதும்

7. வருபவர்க்கெல்லாம் ஞானிகளாகும்
வாய்ப்பும் வரமும் அரங்கன்வழி
தருகின்றேன் ஆறுமுகன் சடுதி இனிதே
தாமுரைத்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–